**செய்தி வெளியீடு எண்: 768** **நாள்:17.10.2020**

## செய்தி வெளியீடு

மூன்றாவது உலக புள்ளிஇயல் தினம் – 2020ஐ ஐக்கிய நாடுகளின் சபை உலகம் முழுவதும் உள்ள அனைத்து நாடுகளும் கொண்டாடும்படி கேட்டுக்கொண்டதை தொடர்ந்து மத்திய அரசு புள்ளிஇயல் மற்றும் திட்ட அமலாக்கத் துறையின் அறிவுறுத்தலின் பேரில் தமிழக அரசின் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் வழிகாட்டுதலின்படி பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் அக்டோபர் 20, 2020 அன்று மூன்றாவது உலக புள்ளிஇயல் தின விழாவை பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்கள் புள்ளிஇயல் துறையுடன் இணைந்து மூன்று நாட்கள் (19.10.2020 முதல் 21.10.2020 வரை) விழாவாக கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் அமைந்துள்ள புதிய மாநாட்டு கூட்ட அரங்கில் 20.10.2020 அன்று காலை 11.00 மணி அளவில் மூன்றாவது உலக புள்ளிஇயல் தின விழாவை மாண்புமிகு கூட்டுறவு, புள்ளிஇயல் மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலன் அமைச்சர் அவர்கள் துவக்கி வைக்கவும், தலைமைச் செயலாளர் அவர்கள் சிறப்புரை ஆற்றவும் உள்ளனர். மேலும், முக்கிய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

19.10.2020 அன்று மாநிலம் முழுவதும் உள்ள புள்ளிஇயல் துறை அலுவலகம் இவ்விழாவினை இணைய வழியில் கொண்டாடுவதுடன் அலுவலக புள்ளிஇயல் சம்பந்தமாக வினா–விடை போட்டிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 21.10.2020 அன்று பல்வேறு மத்திய, மாநில அரசு துறை மற்றும் நிறுவனங்களின் உயர் அலுவலர்கள், தேர்ந்த கல்வியாளர்கள் பல்வேறு புள்ளிஇயல் சார்ந்த தலைப்புகளில் உரையாற்ற உள்ளனர்.

ஆணையர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**